செ.வெ.எண்:12 /2019 நாள்:05.11.2019

## திருப்பூர் மாவட்டம்.

## வேலையில்லாத இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (யு.ஒய்.இ.ஜி.பி) திட்டத்தில் கீழ் பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் டர்க்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு!!!

படித்த வேலையில்லாத இளைஞர்கள் புதிதாக தொழில் துவங்க மாவட்ட தொழில் மையத்தின் மூலம் யு.ஒய்.இ.ஜி.பி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண் 69 குறு, சிறு மற்றும் நடுத்தர தோனில் நிறுவனங்கள் துறை நாள் 11.10.2019-ன் படி இத்திட்டத்தின் கீழ் வியாபாரம் மற்றும் சேவை சார்ந்த தொழில்களுக்கு திட்ட முதலீடு வரம்பு முறையே ரூ 1 இலட்சம் மற்றும் ரூ 3 இலட்சத்திலிருந்து ரூ.5.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ 1.5 இலட்சத்திலிருந்து ரூ 5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. உற்பத்தித் தொழில்களுக்கான திட்ட முதலீடு வரம்பு அதிகபட்சமாக ரூ 10 இலட்சம் என உள்ளது. இத்திட்டத்தின் கீழ் மானியத் தொகை 25 சதவீதம் என்றாலும் முதலீட்டுத் தொகை ரூ 5 இலட்சத்திற்கு மிகைப்படும் போது ரூ 1.25 இலட்சம் மானிய உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற படிப்பு 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் , வயது 18 முதல் 45 வரை இருக்க வேண்டும் மேலும் ஆதார் மற்றும் ரேசன் கார்டு திருப்பூர் மாவட்டத்தில் இருத்தல் மிகவும் அவசியம். திருப்பூர் மாவட்டத்தில் ஆயுத்த ஆடை தயாரிப்பு, பின்னலாடை தயாரிப்பு, தையலகங்கள், பேக்கரி , துணி பைகள் தயாரிப்பு, பேப்பர் பைகள் மற்றும் தட்டு தயாரிப்பு, பயணியர் ஆட்டோ, அச்சகங்கள், சிறிய உணவகங்கள், வாகனங்கள் பழுது பார்க்கும் நிலையங்கள், எம்பிராய்டரி நிறுவனங்கள் போன்ற தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் அமைத்திட இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்திடலாம். திட்டத்தில் பயன்பெற்றிட **www.msmeonline. tn.gov.in / uyegp** என்ற இணைய தளத்தில் விண்ணப்பித்து பின்னர் விண்ணப்பித்தினை பதிவிறக்கம் செய்து இரு நகல்களில் தேவைப்படும் இணைப்புகளுடன் மாவட்ட தொழில் மையம், திருப்பூர் அலுவலகத்தில் சமர்ப்பித்திட வேண்டும். மேலும் விபரங்கள் பெற்றிட கைபேசி எண்.**8248356265** மற்றும் **96296 80109** என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

எனவே வியாபாரம் மற்றும் சேவைத் தொழிலில் ரூ 5 இலட்சம் வரை முதலீடு செய்யவும் மற்றும் உற்பத்தி தொழிலில் ரூ 10 இலட்சம் வரை முதலீடு செய்யவும் ஆர்வமுள்ள இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெறுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.க.விஜயகார்த்திகேயன்,இ.ஆ.ப.,** அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**